
# என்ன செய்ய வேண்டும்?

**‘காட்டிக்கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்’ நூலிலிருந்து**

**மரியநாயகம் நியூட்டன்**




# කළ යුතු දේ මොනවද?

**‘පාවා දුන් මුහුද සහ අතහැර දැමූ ජනතා’ කෘතියෙන්**

**මරියනායගම් නියූට්ටන්**

**என்ன செய்ய வேண்டும்?**

பிரசுரம்: 01
ஆசிரியர்: மரியநாயகம் நியூட்டன்
சிங்கள மொழிபெயர்ப்பு: ப்ரியநதி
வெளியீடு: எழுநா
வடிவமைப்பு: பா. ஜீவமணி
அட்டைப்பட மூலம்: Hydrographer of the Navy (1987).
ஜனவரி 2025

**කළ යුතු දේ මොනවද?**

ප්‍රකාශනය: 1
කර්තෘ: මරියනායගම් නියූට්ටන්
සිංහල පරිවර්තනය: ආර්. ප්‍රියනදි
මුද්‍රණය: එළුණා
නිර්මාණය: පා. ජීවමණි
ආවරණ රූප මූලාශ්‍රය : Hydrographer of the Navy (1987).
ජනවාරි 2025

‘**மரியநாயகம் நியூட்டன்**’ எழுதிய, ‘எழுநா’ வெளியீடாக வெளிவரவிருக்கும், ‘**காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்**’ எனும் நூலானது இலங்கையின் வடக்குக் கடற்பகுதி மீன்பிடி சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பரிமாணம் பற்றி ஆராய்கின்றது. இந்து சமுத்திரப் பிராந்தியக் கடல் அரசியலை விமர்சனப் பார்வையுடன் ஆராய்கின்ற இந்நூல், இலங்கையின் கடல் வளம் எவ்வாறு சர்வதேச சக்திகளால் கூறுபோடப்பட்டுச் சுரண்டப்படுகின்றது என்பதையும் அதன் பின்னணியிலுள்ள உள்ளூர் சக்திகளை ஆதாரங்களுடன் வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது. மேலும், இலங்கைத் தமிழ்க் கடல்சார் மக்களின் கடல் தொடர்பான இறைமை, அவர்கள் சுதந்திரமாக மீன்பிடித்து தமது வாழ்வாதாரத்தை தேடும் உரித்து என்பவை தொடர்பிலும் இது பேசுகின்றது. இந்நூலின் இறுதி அத்தியாயமான ‘**என்ன செய்ய வேண்டும்?**’ எனும் இப்பகுதி, நூலில் விவாதிக்கப்படும் கடல்சார்ந்த சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை சுருக்கமாக முன்வைப்பதாக அமைகிறது. வெகுசனக் கவனத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் பொருட்டு, இவ் இறுதி அத்தியாயமானது, அதன் மூல வடிவிலான தமிழிலும், சிங்களத்திலும் சிறுபிரசுரமாக வெளியாகின்றது.

මරියනායගම් නියූට්ටන් විසින් ලියන ලද ‘එළුණා’ ප්‍රකාශයක් ලෙස දොරට වැඩුමට නියමිත ‘පාවා දුන් මුහුද සහ අතහැර දැමූ ජනතා’ නමැති කෘතිය ශ්‍රී ලංකාවේ උතුරු ධීවර ප්‍රජාවන් මුහුණ දෙන ගැටලුවල මූලාරම්භය, සංවර්ධනය සහ මානයන් ගවේෂණය කරයි. ඉන්දියන් සාගර කලාපයේ සමුද්‍ර දේශපාලනය විචාරාත්මක දෘෂ්ටියකින් විමසා බලන මෙම කෘතිය, ශ්‍රී ලංකාවේ සමුද්‍ර සම්පත් ජාත්‍යන්තර බලවතුන් විසින් හිමිකම් කරන ආකාරය සහ සූරාකෑමට ලක්වන ආකාරය පෙන්වා දෙන අතර එම ක්‍රියාවල පිටුපස සිටින දේශීය බලවේග සාක්ෂි සහිතවද හෙළිදරව් කරයි. තවද, ශ්‍රී ලාංකේය දෙමළ ධීවර ජනතාවගේ සමුද්‍රීය ස්වෛරීභාවය සහ නිදහසේ මසුන් අල්ලා ඔවුන්ගේ ජීවනෝපාය උපයා ගැනීමට ඇති අයිතිය පිළිබඳවද කථා කරයි. මෙම කෘතියේ අවසාන පරිච්ඡේදය වන ‘කළ යුතු දේ මොනවද?’ නමැති මෙම කොටස කෘතියේ විවාදයට ලක්කරන ධීවර සමාජ, දේශපාලන හා ආර්ථික ගැටලු සඳහා වන විසඳුම් කෙටියෙන් ඉදිරිපත් කරයි. මහජන අවධානය සහ දැනුවත්භාවය ඇති කිරීම සඳහා මෙම අවසාන පරිච්ඡේදය එහි මුල් ස්වරූපය වන දෙමළ භාෂාවෙන් සහ පරිවර්තනයක් ලෙස සිංහල භාෂාවෙන් පත්‍රිකාවක් ලෙස ප්‍රකාශයට පත් කෙරේ.

# என்ன செய்ய வேண்டும்?

**வ**டமாகாண கடற்பிரதேசம் வடமேற்கு மாகாண கடல் எல்லையிலிருந்து கிழக்கு மாகாண எல்லை வரை பரந்துள்ளது. இலங்கையின் எந்த மாகாணத்துக்கும் இல்லாத வகையில் பலதரப்பட்ட தொழில்களைச் செய்வதற்கான வளங்களைக் கொண்டது வடமாகாணத்தின் கடற்பிரதேசம். பின்வருவன இன்றுள்ள வடமாகாணக் கடலில் வருவாய் தரக்கூடிய தொழிலாக இருப்பவை:

1. ஆழ்கடல் மீன்பிடி
2. கரையோர மீன்பிடி

## ஆழ்கடல் மீன்பிடி

போர் முடிவுற்ற காலத்தின் பின்பு ஆழ்கடல் மீன்பிடியை அபிவிருத்தி செய்ய அரசினால் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. தனியார்களின் மூலதனத்தைப் பயன்படுத்தி செய்யப்பட்டது வெறும் திருத்தல் வேலைகள் மட்டுமே. நவீன மீன்பிடிக்குத்தக்கது போல தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. உதாரணமாக, வடக்கு மீனவர்கள் தற்போது பாவிக்கும் விசைப்படகுகள் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலத்து இரண்டு-சிலிண்டர் படகுகளாகும். இந்தப் படகுகளை வைத்துக்கொண்டு எவ்வாறு உலகளவில் பாரிய மீன்பிடித் தளங்களில் ஒன்றான, இலங்கை மக்களுக்கே சொந்தமான, பேதுரு கண்டமேடையில் (Pedro Fishing Banks) தொழில் செய்வது? இலங்கைக்கு உரித்தான கடல் எல்லைக்குள் காணப்படும் பேதுரு கண்டமேடைகள் தற்போது இந்தியர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. 1970-1985 வரையான காலத்தில், பேதுரு கண்டமேடை கடற்படுகைகள் இலங்கைத் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததே மாபெரும் அளவிலான மீன்களை வடக்கு மீனவர்கள் பிடிப்பதற்கு மிக முக்கிய காரணமாய் அமைந்தது.

தற்போது, இக் கடற்பிரதேசத்தில் இந்தியர்கள் செய்யும் கடற்கொள்ளையை நிறுத்துவது கடினமான விடயமாக மாறியிருக்கிறது. இதனை நிறுத்த, இலங்கை அரசும்

அரசியல்வாதிகளும் பெரியளவில் முயற்சிகளை எடுக்கவில்லை என்பதை ஏற்கனவே பார்த்தோம். இந்தியாவின் ஏகாதிபத்திய போக்கு, அதன் பொருளாதார பலம், தொழில்நுட்ப அபிவிருத்தி என்பன இலங்கை தனது உரிமைகளை வடகடலில் நிலைநாட்ட முடியாமல் உள்ளமைக்கு காரணங்களாகின்றன. இலங்கை ஆழ்கடல் மீன்பிடிப் படையை (Deep Sea Fishing Fleet) கட்டியெழுப்புவதன் மூலம் மீண்டும் பேதுரு கண்டமேடை மீதான உரிமையையும், ஆதிக்கத்தையும் நிலைநாட்டக் கூடியவாறிருக்கும். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் இலங்கை தனது மிகச்சிறு பொருளாதார பலத்தைக்கொண்டு இதைச் செய்தது.

அதேபோலவே, சர்வதேச அளவிலான ஓர் உதாரணத்தையும் கூற முடியும். சோவியத் யூனியன் இருந்த காலத்தில் அது நோர்வேயின் வடகடல் உரிமைகளை மதித்தது கிடையாது. அன்றிருந்த காலத்தில் உலகத்தின் பெரிய ஆழ்கடல் மீன்பிடி படையை (Deep Sea Fishing Fleet) சோவியத் யூனியன் வைத்திருந்தது. அத்துடன், பாரிய கடற்படையையும் நோர்வேயின் வடகடல் எல்லையில் நிறுத்தி வைத்திருந்தது. தனது பாரிய ஆழ்கடல் மீன்பிடி படையின் உதவியுடன் நோர்வேயின் வடகடலில் வளக்கொள்ளையை நிகழ்த்தியது. கடல் வளங்களை பங்குபோட்டுக் கொள்வதற்கான எந்தவித ஒப்பந்தங்களையும் செய்துகொள்ள சோவியத் மறுத்து வந்தது. இந்த நிலையில் 1970 இற்கு பின்வந்த காலத்தில் பொருளாதார வளர்ச்சியடைந்த நோர்வே முதலில் செய்த வேலை, தனது ஆழ்கடல் மீன்பிடி படையை அபிவிருத்தி செய்ததாகும். இதன்பின் சோவியத் யூனியன், கடலில் வளங்களைப் பங்குபோட்டுக் கொள்ளும் ஒப்பந்தத்தை செய்துகொள்ள உடன்பட்டது. அந்த ஒப்பந்தம் சோவியத் உடைவின் பின்னும் ரஷ்யாவினால் கடைப்பிடிக்கப்படுகிறது.

கடலட்டை வளர்ப்பு போன்ற தொழில்களினால் கிடைக்கும் அந்நிய செலாவணியை விட, ஆழ்கடல் மீன்பிடி படையை அபிவிருத்தி செய்வதன் மூலம் பலமடங்கு வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும். அத்துடன், கடற்கரை சமூகம் பரந்துபட்ட அளவிலான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் இது வழிவகுக்கும்.

## ‘கருவண்டன்’ இறால் பிடிப்பு

அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் தொழில்களுள் வடக்கு கடல் படுக்கைகளில் காணப்படும் கருவண்டன் என்ற இறால் பிடிப்பு முக்கியமானது. சந்தையில் கிடைக்கும் வளர்ப்பு இறால்களை விட, அதிக சர்வதேச சந்தை மதிப்பு வாய்ந்த கருவண்டன்கள் இயற்கையாக கடலில் புளுத்துப் பெருகும். இலங்கைக் கடலில் காணப்படும் கருவண்டன் இறால்கள் இந்திய ரோலர்களினால் களவாடப்படுகிறது. இலங்கையைச் சேர்ந்த இலகுவகை ரோலர்கள், வாரத்தில் மூன்று நாட்கள் கருவண்டனை பிடிக்க அனுமதிக்கப்படுகிறது. ஆனால், உபயோகிக்கும் படகுகள், தொழில்நுட்பம் காரணமாக பெரிய வருவாயை எமது மீனவர்கள் பெறமுடியாதுள்ளது.

## ஓடுகயிறு தொழில் மூலம் பிடிபடும் சூரை மீன்கள்

ஓடுகயிறு தொழில் மூலம் பிடிபடும் சூரை மீன்கள் சர்வதேச சந்தையில் மிகவும் விலைமதிப்புள்ளவை. பருத்தித்துறைக்கு வடக்காக உள்ள கடல் தொடக்கம் நாயாறு வரை செய்யக்கூடிய தொழில் இது. இன்று பருத்தித்துறை, மயிலிட்டி, வல்வெட்டித்துறை போன்ற கிராமங்களைச் சேர்ந்த சில படகுகளே இத்தொழிலில் ஈடுபடுகின்றன. இப்படகுகள்கூட கரைக்கு மிகவும் அண்மையிலான கடற்பிரதேசத்திலேயே தொழில் செய்யக் கூடியவை. மீன்பிடிக்கச் செல்லும் அதே நாளிலேயே கரைக்குத் திரும்ப வேண்டிய நிலையில் உள்ளவை. இவை பிடிக்கும் மீன்கள் ஐஸ்கட்டிகளை போட்டு பழுதடையாமல் பாதுகாத்து வைக்கப்படுவதனால் உடனடியாகவே கரைக்கு திரும்ப வேண்டிய நிலையில் காணப்படுகின்றன.

இன்றுள்ள நவீன மீன்பிடிக்கு ஏற்ப இத்தொழில் செய்வதற்கு கடலில் பல நாட்கள் தங்கி தொழில் செய்வதற்கான குளிர்சாதன வசதிகளுடனான நவீன படகுகள் (Multi Day Fishing Boats - Vessels With Freezer Facilities) தேவைப்படுகின்றன. தென்னிலங்கை நிறுவனங்களுக்கும், தனியாருக்கும் சொந்தமான இந்தவகை படகுகள் சில வடக்கில் சூரை மீன்பிடித் தொழிலை செய்கின்றன. ஆயினும், மேலதிகமாக சில நூறு படகுகள் தொழில் செய்வதற்கான கடற்பரப்பு எம்மிடம் உள்ளது. இதேநிலமை தென்னிலங்கை கடற்பரப்பிலும் காணப்படுகிறது. இலங்கைக்கு

வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரக்கூடிய சூரை மீன்கள் இன்று சீன, இந்திய நாடுகளினால் கொள்ளையிடப்படுகிறது.

## ஆழ்கடல் ஓட்டு மீன்பிடி

மேற்கூறிய இருவகை தொழில்களும் தேசிய வருமானத்துக்காக டொலர்களை - அந்நிய செலாவணிகளைத் தரக்கூடிய ஏற்றுமதி சார்ந்த மீன்பிடிகளாகும். இலங்கையின் உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய தொழில்களையும் வடக்கின் ஆழ்கடலில் செய்யமுடியும். பாக்கு நீரிணையுடன் பிணைந்திருக்கும் பேதுரு மீன்பிடித் தளமானது பெரியளவிலான ஓட்டு மீன் (Pelagic Fish) வளத்தைக் கொண்டது. ஓட்டு மீன்கள் என்பவை பருவகாலத்தில், குறிப்பாக, வாடைக்காற்று வீசும் காலத்தில், வடக்கின் கடற்பிரதேசத்துக்குள் வருபவை. இந்த மீன்களைப் பிடிக்க பலவகை வலைத் தொழில்கள் செய்யப்படுகின்றன. இன்று, சிறு கண்ணாடி இழைப்படகுகளையே எமது மீனவர்கள் பயன்படுத்துகின்றார்கள். இவை அதிகபட்சம் கரையிலிருந்து 10km இற்கும் குறைவான பகுதியிலேயே மீன்பிடிக்கின்றன.

இப் படகுகள் மீன்கள் அதிகமாக காணப்படும் பேதுரு கண்டமேடையின் உள்ளே பிரவேசிப்பதில்லை. அதன் விழிப்பு பிரதேசத்திலேயே தொழில் செய்கின்றன. பேதுரு கண்டமேடையின் ஓட்டு மீன் வளத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனில் நவீனமயப்படுத்தப்பட்ட மீன்பிடிக் கலங்களும், புதிய தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட தொழில் முறையும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வீழ்ச்சி அடைந்துள்ள கரையோர மீன்பிடியை நம்பி வாழும் மீனவர்களுக்கு மானிய உதவிகளுடன், பலர் சேர்ந்து படகுகள், உபகரணங்களை கொள்வனவு செய்யும் முறைமையும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அல்லது மீனவர் கூட்டுறவு (Co-operative) முறைமையின் ஊடாக உபகரணங்களைக் கொள்வனவு செய்து, கூட்டாகத் தொழில் செய்யும் முறை மறுபடியும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேற்கூறிய இரு முறைமைகளும் மீனவ சமூகத்தில் 1980 இன் நடுப்பகுதி வரை காணப்பட்டது. இவ்வகை கூட்டு முயற்சிகளை அறிமுகம் செய்வதன் மூலம் ஒவ்வொரு மீனவனும் நன்மை அடையலாம். இதனால், தேசிய வருமானத்துக்கான பங்களிப்பு

உயர்வதுடன், இலங்கை மக்களின் புரதச்சத்து தேவையும் நிவர்த்தி செய்யப்படும்.

## கரையோர மீன்பிடி கரையோர இறால் பிடிப்பு மற்றும் வெள்ளை நண்டு பிடிப்பு

வடமாகாணத்தின் எல்லாக் கரைகளிலும் வெள்ளை நண்டு பெருகிக் கிடக்கிறது. யாழ்ப்பாண குடாநாட்டுப் பகுதியில் பூநகரி தொடக்கம் வடக்கு நோக்கி யாழ் நகரத்தின் கரையோரம் ஈறாக, நாவாந்துறை, அராலி, தம்பாட்டி மற்றும் புங்குடுதீவு மடத்துவெளி வரை கருவண்டன் இறால்கள் களக்கடலில் பிடிக்கப்படுகிறது. இந்தவகை நண்டும் இறாலும் ஏற்கனவே பலகாலமாக இந்த கடற்பிரதேசங்களில் காணப்பட்டாலும், கடந்த 30 வருடங்களில் ஏற்பட்ட காலநிலை மாற்றம், கடல் நீரோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக முட்டைகளாகவும், குஞ்சுகளாகவும் கரைக்கு வந்து வளர்ச்சி அடைபவை. வெள்ளை நண்டின் வரத்துப் பற்றி இத்தொகுப்பில் உள்ள பிறிதொரு கட்டுரையில் விபரித்துள்ளேன். அதேபோலவே, இறால் முட்டைகளும் குஞ்சுகளும் நீரோட்டத்தில் கரைக்கு வருகின்றன.

2009 போர் முடிவிற்குப் பின்வந்த காலம் தொடக்கம் இன்று வரை சில இலட்சங்கள் முதலிட்டுச் (வள்ளம் + வலைகள்) செய்யக்கூடிய நண்டுத் தொழிலும் இறால் பிடியும் பல்லாயிரம் மீனவர்களினால் செய்யப்படும் தொழில்களாக இருந்து வருகின்றன. எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் இவை பிடிக்கப்படுகின்றன. பிடித்தவரையும் இலாபம் என்ற சிந்தனையின் அடிப்படையில் மீனவர்கள் இந்த இரு கடல்படு திரவியங்களையும் கையாளுகிறார்கள். மிகவும் சிறிய குஞ்சு இறால்களும், குருக்கான் நண்டுகளும் பிடிக்கப்படுகின்றன.

இவை இரண்டும், வாடைக்காற்று வீசும் கார்த்திகை தொடக்கம் பங்குனி வரையான காலத்தில் குஞ்சுகளாகவும் முட்டைகளாகவும் நீரோட்டத்தின் உதவியுடன் வடக்கின் கடலை வந்து சேர்கின்றன. இவை வளர்ந்து பெருக்கும் காலம் பங்குனி தொடக்கம் மார்கழி வரையான காலம். குறைந்தது ஆறு மாதங்களாவது இவை வளர்ச்சியடையத் தேவை. ஆனால், இவை வளர வளர சில மாதங்களிலேயே பிடிக்கப்படுகின்றன. ஆறுமாத காலத்தில் 100

*கிராம் அளவுக்கு வளரக்கூடிய நண்டுகளை முட்டுக்கண் தங்கூசி வலைகளைக் கொண்டு மூன்று மாதங்களுக்கும் குறைவான காலத்திலேயே பிடித்து விடுகின்றனர். தமது அன்றாடச் சீவியத்துக்கு கிடைத்தால் போதும் என்ற இந்தப் போக்கு, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பெருமளவு வருமானத்தை இழக்கச் செய்கிறது.*

*இந்த நிலையை மாற்ற அரசும் மீனவ சமூகமும் சேர்ந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உதாரணமாக, சித்திரை மாதம் தொடக்கம் மார்கழி வரையான காலத்தில் நண்டு பிடிக்கும் தொழிலை நிறுத்திவைக்க வேண்டும். நிறுத்தப்படும் காலத்தில் நண்டு பிடிக்கும் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரத்துக்கான உதவிகளை அரசும் - மீனவ சமூகமும் இணைந்து வழங்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நண்டுபிடித் தொழில் நிறுத்தப்படும் காலத்தில், வருமானத்துக்காக மாற்றுத் தொழில்களைச் செய்வதற்கான பயிற்சிகள், வசதிகளை அரசு செய்து கொடுக்க வேண்டும்.*

*இதேபோலவே, கரைகளில் இறால்கூடு மற்றும் களங்கண்டிகள் வைத்து இறால் பிடிப்பவர்களுக்கும் சித்திரை தொடக்கம் புரட்டாதி வரையான காலம் வரையும் தொழில் செய்வதற்கு தடை விதிக்கப்படல் வேண்டும். குஞ்சு இறால்கள் வளர்ந்து, குறைந்தது 25 கிராம் அளவிலாவது வரும்வரை, இத்தடை இருக்க வேண்டும். நண்டு பிடிக்கும் தொழிலாளிகளுக்கு ஏற்பாடு செய்வது போலவே இவர்களுக்கும் மாற்று வருமானம் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதனால், 6-9 மாதங்கள் தொழிற்தடை செய்யப்படுவதனால் ஏற்படும் நன்மையை மீனவர்கள் உணர்ந்து கொள்வார்கள். தடைநீங்கி தொழில் அனுமதிக்கப்படும் ஆறு மாதங்களில் வருமானத்தின் உயர்வை அவர்களே சுயமாகக் கண்டடைவார்கள். காலப்போக்கில் மானியங்களிலும், அரச உதவிகளிலும் தங்கிச் சீவிக்கும் நிலையிலிருந்து வெளிவர முடியும்.*

## எதிர்காலம் கடலை நம்பி மட்டுமல்ல

*மீனவ சமூகங்கள் கடலை நம்பி மட்டும் இருக்கும் நிலையிலிருந்து வெளிவர வேண்டும். 80களின் நடுப்பகுதி வரை கல்வி சார்ந்த உத்தியோகங்களில் பணி செய்யும் நிலைமை*

வளர்ந்து வந்தது. போரின் காரணமாக கல்வி, அது சார்ந்த பணிகளில் ஈடுபடும் தொகை, மீனவ சமூகங்களில் வீழ்ச்சியைக் கண்டுள்ளது. மீன்பிடி சார்ந்த அரச மற்றும் தனியார் நிறுவனப் பணிகளில் அதிகமாகப் பணி செய்த மீனவ சமூகத்தவரின் தொகையிலும்கூட வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கல்வி மற்றும் அதுசார்ந்த பணிகளில் பங்கெடுக்கும் தொகையை அதிகரிப்பதற்கான முயற்சிகளை ஒரு சமூகமாக நாம் முன்னெடுக்க வேண்டும். கடல் சார்ந்த சமூகங்களில் A/L வரை படித்துவிட்டு கடற் தொழிலில் ஈடுபடும் இளைஞர்தொகை அதிகமாகக் காணப்படுகின்றது. இவர்களுக்கு நவீன மீன்பிடி முறைகளை கற்கையாக கற்பிப்பதன் மூலம், இயற்கைக்குச் சிநேகமான பல மாற்று மீன்பிடி முறைகளை அறிமுகம் செய்யலாம்.

மீனவ சமூகங்களில் படித்த, கடல்சார்ந்த அனுபவம் கொண்டவர்களின் கல்வித் தகமைகளுக்கு ஏற்ப கடல் சார்ந்த அரச பணிகளில் குறைந்தது 50% ஆவது வழங்கப்பட வேண்டும். இன்று, அரசியல் மற்றும் அதிகார வர்க்கத்துக்கு நெருக்கமானவர்களுக்கே பணிகள் வழக்கப்படுகின்றன. மீனை அருவருப்பாகவும், கடலை குப்பைத் தொட்டியாகவும், துடக்காகவும் பார்க்கும் ஒருவர் கடல் சார்ந்த அரசபணிகளில் ஈடுபடுவதற்கும் - கடல்சார்ந்து வாழும் சமூகப் பின்னணியைக் கொண்ட, அதன்மீது உளவியல் ரீதியான நெருக்கமும் அன்பும் இருக்கும் ஒருவர் இப்பணிகளில் ஈடுபடுவதற்கும் பாரிய வித்தியாசம் உள்ளது. இது விவசாயத்துறைக்கும் பொருந்தும்.

கடல், விவசாய சமூகப் பின்னணிகளிலிருந்து வருபவர்களை இத்தொழில்கள் சார்ந்த அரச பணிகளின் அமர்த்துவது இன்றும் வளர்ச்சி அடைந்த நாடுகளில் உள்ள முறைமையாக இருக்கிறது. வெறும் கல்வியை அடிப்படையாகக்கொண்ட அறிவை விட, மேலதிகமாக இவர்களுக்கிருக்கும் அத் தொழில்கள் சார்ந்த அனுபவ அறிவும், கலாசாரப் புரிதலும், சமூகப் பொருளாதார அனுபவப் பார்வையும் இப்பணிகளை இலகுவாகவும், சரியான முறையிலும் நிறைவேற்ற உதவியாகவிருக்கும். கடல் சார்ந்து சீவிக்கும் மக்கள் சமூகம், கடல் பொருளாதாரத்தில் மட்டுமே தங்கி இருக்கும் நிலையிலிருந்து, பல் பொருளாதார சீவியம் நடத்தும் மக்கள் சமூகமாக மாற்றப்படல் வேண்டும்.

# කළ යුතු දේ මොනවද?

‘කළ යුතු දේ මොනවද?’ යන මෙම රචනාව, ශ්‍රී ලංකාවේ උතුරු සමුද්‍ර කලාපයේ ධීවර ප්‍රජාවන් මුහුණ දෙන ගැටලුවල මූලාරම්භය, වර්ධනය සහ මානයන් ගවේෂණය කරයි. ඉන්දියන් සාගර කලාපයේ සමුද්‍ර දේශපාලනය විවේචනාත්මකව විමර්ශනය කරන මෙම ලිපි මාලාව, ශ්‍රී ලංකාවේ සාගර සම්පත් ජාත්‍යන්තර බලවතුන් විසින් සූරාකෑමට ලක්වන ආකාරය හෙළිදරව් කරන අතර එම ක්‍රියාවෙහි පිටුපස සිටින දේශීය බලවතුන් සාක්ෂි සමඟ හැළිදරව් කරයි. එමෙන්ම, ශ්‍රී ලාංකේය දෙමළ ධීවර ජනතාවගේ නිදහස් මසුන් ඇල්ලීමේ අයිතිය සහ ඔවුන්ගේ ජීවනෝපාය සම්බන්ධයෙන් ඔවුන්ගේ ස්වෛරීභාවය පිළිබඳව ද මෙම රචනාව විස්තරාත්මකව සාකච්ඡා කරයි.

උතුරු පළාත් සමුද්‍ර කලාපය, වයඹ පළාත් මුහුදු සීමාවේ සිට නැගෙනහිර පළාත් මායිම දක්වා විහිදී ඇත. උතුරු පළාතේ සමුද්‍ර කලාපය, ශ්‍රී ලංකාවේ වෙනත් කිසිම පළාතකට වඩා විවිධ කර්මාන්ත සිදු කිරීමට අපූර්ව සම්පත් සහිත ප්‍රදේශයකි. අද උතුරු මුහුදේ ලාභදායී කර්මාන්ත පහත දක්වා ඇත.

1. ගැඹුරු මුහුදේ මසුන් ඇල්ලීම
2. වෙරළ තීරයේ මසුන් ඇල්ලීම

### ගැඹුරු මුහුදේ මසුන් ඇල්ලීම

යුද්ධය අවසන් වීමෙන් පසු, ගැඹුරු මුහුදේ ධීවර කර්මාන්තය දියුණු කිරීමට රජය කිසිදු උත්සාහයක් නොගතහ. පෞද්ගලික ප්‍රාග්ධනය මත සීමිත අලුත්වැඩියා කිරීම කටයුතු පමණක් සිදු කරන ලදී. නවීන ධීවර කර්මාන්තය සඳහා ගැළපෙන කර්මාන්ත කිසිවක් දියුණු වී නැත. උදාහරණයක් ලෙස, උතුරේ ධීවරයන් අදටත් භාවිතා කරන්නේ ශ්‍රීමාඕ බණ්ඩාරනායක යුගයේ නිෂ්පාදිත සිලින්ඩර දෙකේ බෝට්ටු වේ. මෙම පැරණි බෝට්ටු භාවිතයෙන් ශ්‍රී ලාංකීය ජනතාවට අයත් ලෝකයේ විශාලතම ධීවර යාත්‍රාවලින් එකක් වන පේද්‍රුරු ධීවර බැංකුව (Pedro fishing Bank) සමඟ ගනුදෙනු කරන්නේ කෙසේද යන්න වැදගත් ප්‍රශ්නයකි. ශ්‍රී ලංකාවේ මුහුදු සීමාව තුළ පිහිටා ඇති පේද්‍රුරු ධීවර බැංකුව (Pedro fishing Bank) දැනට ඉන්දියාව විසින් පාලනය කරනු ලබයි. 1970-1985 කාලය තුළ, ශ්‍රී ලාංකික කම්කරුවන් විසින් මෙම

පේද්‍රුරු ධීවර බැංකු පාලනය කිරීම, උතුරේ ධීවරයන්ට විශාල මසුන් ප්‍රමාණයක් ඇල්ලීමට ප්‍රධාන හේතුව විය.

වර්තමානයේ, මෙම මුහුදු කලාපයේ ඉන්දීය මුහුදු කොල්ලකෑම් නැවැත්වීම දුෂ්කර වී තිබේ. මෙය නැවතීමට ශ්‍රී ලංකා රජය සහ දේශපාලකයන් විශාල උත්සාහයක් නොගන්නා බව මීට පෙර දැක්කෙමු. ඉන්දියාවේ අධිරාජ්‍යවාදී ප්‍රවණතා, ආර්ථික ශක්තිය සහ තාක්ෂණික දියුණුව ආදීන් ශ්‍රී ලංකාවට උතුරු මුහුදේ අයිතිය සහ ආධිපත්‍යය තහවුරු කිරීමට නොහැකිවීමට ප්‍රධාන හේතු වේ. ගැඹුරු මුහුදේ ධීවර යාත්‍රා (Deep Sea Fishing Fleet) ගොඩනැගීමෙන් සහ නවීන ධීවර තාක්ෂණය ආරම්භ කිරීමෙන්, ශ්‍රී ලංකාවට මහද්වීපික තටාකයේ අයිතිය සහ ආධිපත්‍යය යළි තහවුරු කර ගැනීමට හැකියාව පවතින අතර, මෙය සාගර සම්පත් ආරක්ෂා කිරීමට ද වැදගත් වේ. ශ්‍රීමාඕ බණ්ඩාරනායක යුගයේදී, ශ්‍රී ලංකාව තම කුඩා ආර්ථික බලාගාරය සමගින් මෙම කාර්ය අත්පත් කරගෙන තිබූ බව ද අවධානයට ගත යුතුය.

එමෙන්ම, ජාත්‍යන්තර උදාහරණයක් ලෙස, සෝවියට් සංගමය කාලය තුළදී එය  කිසිවිටෙකත් නොර්වේයෙහි උතුරු මුහුදේ අයිතිවාසිකම්වලට ගරු කළේ නැත. එවකට සෝවියට් සංගමය සතු ලෝකයේ විශාලතම ගැඹුරු මුහුදේ ධීවර නාවික කණ්ඩායමක් තිබුණි. තවද, සෝවියට් සංගමය විසින් විශාලතම නාවික කණ්ඩායමක ද නොර්වේයෙහි උතුරු මුහුදු සීමාවේ ස්ථානගත කිරීම සිදු කරන ලදී තමාගේ විශාලතම ගැඹුරු මුහුදේ ධීවර පද්ධතිය මගින් නොර්වේයෙහි උතුරු මුහුදේ සම්පත් සොරකම් කැරුවේය. සෝවියට් සංගමය, සමුද්‍ර සම්පත් බෙදා ගැනීම සඳහා කිසිදු ගිවිසුමකට එළැඹීමට ප්‍රතික්ෂේප කළේය. 1970 දශකය අවසන් වන විට, නෝර්වේ සිය ආර්ථිකය සංවර්ධන කරමින් ගැඹුරු මුහුදේ ධීවර කටයුතු සහ තාක්ෂණය දියුණු කිරීමට ආරම්භ කළේය. ඉන්පසු, සෝවියට් සංගමය උතුරු මුහුදේ සම්පත් බෙදා ගැනීම සඳහා ගිවිසුමකට එකඟ විය. සෝවියට් සංගමය බිඳී යාමෙන් පසුව ද, රුසියාව විසින් මෙම ගිවිසුම අනුගමනය කරන ලදී.

මුහුදු පිපිඤ්ඤා වගාව වැනි කුඩා මට්ටමේ කර්මාන්තවලින් ලැබෙන විදේශ විනිමයට වඩා කිහිප ගුණයකින් වැඩි ආදායමක් ගැඹුරු මුහුදේ ධීවර සම්පත් සංවර්ධනය කිරීමෙන් උපයා ගැනීමට හැකියාව ඇත. එය ධීවර ප්‍රජාවේ පුළුල් පරිමාණ ආර්ථික සංවර්ධනයට ඉඩ ලබා දෙයි.

**ඉස්සන්** (Tiger prawn) **ඇල්ලීම**

විදේශ විනිමය උපයන කර්මාන්ත අතර, උතුරු මුහුදු පත්ලෙන් හමුවන ඉස්සන් (Tiger prawn) ඇල්ලීම ඉතා වැදගත් වේ. වෙළඳපොළේ ලැබෙන වගා කරන ලද ඉස්සන්ට වඩා ජාත්‍යන්තර වෙළඳපොළේ ඉහළ වටිනාකමක් ඇති ඉස්සන් (Tiger prawn) මුහුදේ ස්වභාවිකව වර්ධනය වෙයි. ශ්‍රී ලංකා මුහුදෙන් හමුවන ඉස්සන් (Tiger prawn) ඉන්දියානු රෝලර් ජාලවලට හසුවී දැඩි අභියෝගයකට මුහුණ දෙයි. ලංකාවේ භාවිතා වන සැහැල්ලු රෝලර්වලට සතියකට දින තුනක් පමණක් ඉස්සන් (Tiger prawn) ඇල්ලීමට අනුමැතිය ලබා දී ඇත. නමුත්, භාවිතා කරන ලද පැරණි බෝට්ටුවල පවතින තාක්ෂණික දෝෂය හේතුවෙන් ශ්‍රී ලංකා ධීවරයන්ට වැඩි ආදායමක් උපයා ගැනීමේ හැකියාව නැත.

**මරුවෙල් පන්න කර්මාන්ත විසින් අල්ලා ගන්නා ලද බලමාළු**

මරුවෙල් පන්න කර්මාන්ත විසින් අල්ලා ගන්නා ලද බලමාළුවලට ජාත්‍යන්තර වෙළඳපොළේ ඉහළ අගයක් ගනී. එය පේදුරු තුඩුවට උතුරින් පිහිටි මුහුදේ සිට නායාරු දක්වා කළ හැකි ව්‍යාපාරයකි. අද පේදුරු තුඩුව, මයිලිට්ටි, වල්වැට්ටිතුරේ වැනි ගම්මානවලින් බෝට්ටු කිහිපයක් පමණක් මේ කර්මාන්තයේ නිරත වේ. මෙම බෝට්ටු වෙරළට ඉතා ආසන්න ජලයේ ක්‍රියා කළ හැකි අතර මසුන් ඇල්ලීමට යන එදිනම වෙරළට නැවත පිවිසිය යුතු තත්ත්වයක තිබේ. මෙම ක්‍රමය හරහා අල්ලා ගන්නා ලද මසුන් අයිස් කැට යොදා සංරක්ෂණය කර වහාම වෙරළට ගෙන එනු ලැබේ.

වර්තමාන නවීන ධීවර කර්මාන්තය අනුව මෙම කර්මාන්තයට දින කිහිපයක් මුහුදේ රැඳී සිටීමට හැකි වන පරිදි සීතකරණ පහසුකම් (Multi Day Fishing Boats – Vessels with Freezer Facilities) සහිත නවීන බෝට්ටු අවශ්‍ය වේ. දකුණු ලංකා ආයතන සහ පෞද්ගලික පුද්ගලයන්ට අයත් මෙම බෝට්ටුවලින් සමහර උතුරේ බලමාළු ඇල්ලීමෙන් නිරත වෙයි. කෙසේ වෙතත්, මීට අමතරව බෝට්ටු සිය ගණනක් ධාවනය කිරීම සඳහා වන මුහුදු අවකාශය අප සතුව තිබේ. දකුණු ලංකා වෙරළ තීරයේ ද එවැනිම තත්ත්වයක් තිබේ. ශ්‍රී ලංකාවට විදේශ විනිමය ලබා දිය හැකි බලමාළු අද චීනය සහ ඉන්දියාව විසින් දඩයම් කරනු ලබයි.

**ගැඹුරු මුහුදු මසුන්** (Pelagic Fish) **ඇල්ලීම**

ඉහත සඳහන් කර්මාන්ත දෙකම අපනයන මත පදනම් වූ ධීවර කර්මාන්තය වන අතර එමඟින් ජාතික ආදායම සඳහා ඩොලර් - විදේශ විනිමය උපයා ගත හැකිය. ශ්‍රී ලංකාවේ දේශීය අවශ්‍යතා සපුරාලිය හැකි කර්මාන්ත උතුරු ගැඹුරු මුහුදේ ද සිදු කළ හැකිය. පෝක් සමුද්‍ර සන්ධියට සම්බන්ධ පේදුරු ධීවර තලයේ විශාල වශයෙන් මසුන් (Pelagic Fish) ඇත. මෙම මසුන් (Pelagic Fish) විශේෂයෙන්, සුළං සමයේදී උතුරු මුහුදට පැමිණේ. ෆයිබර්ග්ලාස් බෝට්ටු මේ සඳහා භාවිතා කරනු ලැබේ. මෙම ෆයිබර්ග්ලාස් බෝට්ටු උපරිම වශයෙන් වෙරළේ සිට කිලෝමීටර් 10කටත් අඩු දුරකින් මසුන් අල්ලයි.

මේ බෝට්ටු මසුන් බහුලව සිටින පේදුරු ධීවර තලයට පිවිසන්නේ නැත. පේදුරු ධීවර තලයේ මසුන් (Pelagic Fish) සම්පත් ප්‍රයෝජනයට ගැනීමට අවශ්‍ය නම් නවීකරණය කරන ලද ධීවර යාත්‍රා සහ නව තාක්ෂණික පහසුකම් ශ්‍රී ලංකාවේ හඳුන්වා දිය යුතුය. අඩුවෙමින් පවතින වෙරළබඩ මත්ස්‍ය සම්පත් මත යැපෙන ධීවරයින්ට සහනාධාර සමඟ බෝට්ටු සහ උපකරණ සාමූහිකව මිලදී ගැනීමේ ක්‍රමයක් හඳුන්වා දිය යුතුය. හෝ ධීවරයින් සමුපකාර (Co-operative) පද්ධතිය හරහා උපකරණ මිල දී ගෙන නැවත හවුල් ව්‍යාපාර හඳුන්වා දිය යුතුය. ඉහත ක්‍රම දෙකම 1980 දශකයේ මැද භාගය දක්වා ධීවර ප්‍රජාව තුළ නිරීක්ෂණය විය. මෙවැනි හවුල් ව්‍යාපාර හඳුන්වා දීමෙන් සෑම ධීවරයෙකුටම ප්‍රතිලාභ ලබාගත හැකියි. මේ අනුව, ජාතික ආදායමට ලැබෙන දායකත්වය ඉහළ යන අතර ශ්‍රී ලංකා ජනතාවගේ ප්‍රෝටීන් අවශ්‍යතාවයට ද විසඳුම් ලැබෙනු ඇත.

**වෙරළ තීර මසුන් ඇල්ලීම**

**වෙරළබඩ ඉස්සන් ඇල්ලීම සහ සුදු කකුළුවන් ඇල්ලීම**

උතුරේ සෑම මුහුදකම සුදු කකුළුවන් බහුලව සිටිති. යාපනය අර්ධද්වීපයේ පූනගරි සිට උතුරට යාපනය නගරයේ වෙරළ තීරයේ නාවාන්දුරේ, අරාලි, තම්බාට්ටි, පුංගුඩුතිව් සහ මඩත්තුවේලි දක්වා ඉස්සන් අල්ලා ගනු ලැබේ. මෙම ජාතියේ කකුළුවන් සහ ඉස්සන් දීර්ඝ කාලයක සිට මෙම මුහුදු ප්‍රදේශයේ දක්නට ලැබුණද, පසුගිය වසර 30 තුළ ඇති වූ දේශගුණික විපර්යාස සහ සාගර ප්‍රවාහවල වෙනස්වීම් හේතුවෙන් බිත්තර සහ පැටවුන් වෙරළබඩට පැමිණ වර්ධනය වේ. මම මේ ලිපි මාලාවේ තවත් ලිපියකින් සුදු කකුළුවන් වෙරළබඩට පැමිණ ආකාරය

පැහැදිලි කළෙමි. එසේම, ඉස්සන් බිත්තර සහ පැටවුන් දිය පහරින් වෙරළට ගසාගෙන එයි.

2009 යුද්ධය අවසන් වූ කාලය සිට මේ දක්වා ලක්ෂ කිහිපයක් ආයෝජන (වල්ලම් + දැල්) කරමින් කකුළු කර්මාන්තය සහ ඉස්සන් ඇල්ලීම දස දහස් ගණන ධීවරයින් විසින් කරනු ලබන කර්මාන්ත වේ. කිසිදු සීමාවකින් තොරව මේවා අල්ලා ගනු ලැබේ. අල්ලා ගැනීම තරම් ලාභය යන සංකල්පය මත ධීවරයින් මෙම මුහුදු ද්‍රව්‍ය සමඟ ගනුදෙනු කරති. ඉතා කුඩා ඉස්සන් සහ කකුළුවන් අල්ලා ගනු ලැබේ.

ඉස්සන් සහ කකුළුවන් නොවැම්බර් මාසය සිට මාර්තු මාසය දක්වා වන අධික සුළඟ කාලය තුළ පැටවුන් සහ බිත්තර ලෙස ගලා බසින මුහුදු ජලයේ ආධාරයෙන් උතුරු මුහුදට පැමිණේ. මේවා වර්ධනය වී බහුල වන කාලය මාර්තු සිට දෙසැම්බර් දක්වා වන කාලය වේ. මේවා වර්ධනය වීම සඳහා අවම වශයෙන් මාස හයක කාලය අවශ්‍ය වේ. නමුත්, මේවා වර්ධනය වී මාස කිහිපයක් ඇතුළත අල්ලා ගනු ලැබේ. මාස හයකින් ග්‍රෑම් 100 දක්වා වර්ධනය විය හැකි කකුළුවන් මාස තුනකට අඩු කාලයකදී තංස්ටන් දැල් භාවිතා කර අල්ලා ගනු ලැබේ. ඔවුන්ගේ දෛනික අවශ්‍යතා සඳහා ප්‍රමාණවත් තරම් ලබා ගැනීමේ මෙම ප්‍රවණතාවය ඔවුන්ට ලැබිය යුතු විශාල ආදායමක් අහිමි කරයි.

මේ තත්ත්වය වෙනස් කිරීමට රජය සහ ධීවර ජනතා පියවර ගත යුතුයි. උදාහරණයක් ලෙස, අප්‍රේල් මාසය සිට දෙසැම්බර් මාසය දක්වා වන කාලය තුළ කකුළුවන් ඇල්ලීම තහනම් කළ යුතුය. තහනම් කරන ලද කාලය තුළ කකුළුවන් කර්මාන්තයේ යෙදී සිටින කම්කරුවන්ට ජීවනෝපාය ආධාර ලබාදීමට රජය සහ ධීවර ප්‍රජාව කටයුතු කළ යුතුය. කකුළුවන් ඇල්ලීමේ කර්මාන්තය තහනම් කරන කාලය තුළ ආදායම් සඳහා විකල්ප කර්මාන්ත කිරීමට රජය විසින් පුහුණු හා පහසුකම් ලබාදිය යුතුය.

එමෙන්ම, වෙරළ තීරයේ ඉස්සන් කූඩු සහ කලංකණ්ඩි (ජා කොටු) භාවිතා කරමින් ඉස්සන් අල්ලන පුද්ගලයන්ට ද අප්‍රේල් මාසය සිට සැප්තැම්බර් මාසය දක්වා වන කාලය තුළ තහනම් පැනවිය යුතුය. ඉස්සෝ පැටවුන් වර්ධනය වී අවම වශයෙන් ග්‍රෑම් 25ක් දක්වා ළඟා වන තුරු මෙම තහනම පැනවිය යුතුය. කකුළු ධීවරයන්ට ප්‍රතිපාදන සලසන ආකාරයටම මෙවුන්ටද විකල්ප ආදායම් සඳහා ප්‍රතිපාදන සැලසිය යුතුය. එබැවින්, මාස 6-9 කාලයක් තහනම් පැනවීමේ වාසිය ධීවරයින්ට අවබෝධ වේ. තහනම ඉවත් කර ව්‍යාපාරයට ඉඩ දී මාස

හයක් ඇතුළත ආදායමේ වැඩිවීමක් ඔවුන්ම දකිනු ඇත. කාලයත් සමඟ සහනාධාර සහ රජයේ ආධාර මත යැපීමෙන් ඉවත් විය හැකිය.

## අනාගතය රඳා පවතින්නේ මුහුද මත පමණක් නොවේ

ධීවර ප්‍රජාවන් මුහුද මත යැපීමෙන් එළියට ආ යුතුය. 80 දශකයේ මැද භාගය දක්වා අධ්‍යාපන ආශ්‍රිත වෘත්තිවල රැකියා කරන තත්ත්වය වර්ධන විය. යුද්ධය හේතුවෙන් අධ්‍යාපන හා ආශ්‍රිත වෘත්ති කරන ප්‍රමාණය ධීවර ප්‍රජාවන් තුළ අඩු විය. ධීවර ආශ්‍රිත රාජ්‍ය සහ පෞද්ගලික අංශයේ රැකියාවල වැඩි වශයෙන් සේවය කළ ධීවර ප්‍රජාවන්ගේ සංඛ්‍යාවේ ද අඩුවීමක් දක්නට ලැබේ.

අධ්‍යාපන සහ ඒ ආශ්‍රිත සේවාවේ සහභාගිත්වය වැඩි කිරීමට සමාජයක් ලෙස  අප උත්සාහ කළ යුතුයි. ධීවර ආශ්‍රිත සමාජ තුළ උසස් පෙළ දක්වා ඉගෙනගෙන ධීවර කර්මාන්තයට සම්බන්ධ වන තරුණ තරුණියන් සංඛ්‍යාවේ වැඩි වීමක් පවති. ඔවුන්ට නවීන ධීවර ක්‍රම ඉගැන්වීමෙන් පරිසර හිතකාමී විකල්ප ධීවර ක්‍රම රැසක් හඳුන්වා දිය හැකිය.

සමුද්‍රීය ආශ්‍රිත රජයේ සේවාවලින් අවම වශයෙන් 50%ක් ලබා දිය යුතුය. වර්තමානයේ, දේශපාලන හා පාලක පන්තියට සමීප අයට රැකියා ලබා දෙනු ලැබේ. මාළුව පිළිකුල් සහගත ලෙසත්, සාගරය කුණු බක්කියක් ලෙසත්, අපිරිසිදු ලෙසත්, දකින පුද්ගලයෙකු සමුද්‍රීය ආශ්‍රිත රජයේ සේවාවලින් නිරත වීමටත්, සමුද්‍රීය ආශ්‍රිතව ජීවත්වන සමාජ පසුබිමක් ඇති, ඒ සඳහා මනෝවිද්‍යාත්මක හිතවත්කමක් හා ආදරයක් ඇති පුද්ගලයෙකු මෙම සේවාවලින් නිරත වීමටත්, විශාල වෙනසක් ඇත. මෙය කෘෂිකර්ම ක්ෂේත්‍රයටත් සුදුසුයි.

සමුද්‍රීය සහ කෘෂිකර්ම සමාජ පසුබිම්වලින් එන පුද්ගලයන් මෙම කර්මාන්ත ආශ්‍රිත රජයේ සේවා සඳහා බඳවා ගැනීම දැනටත් දියුණු රටවල තිබෙන ක්‍රියාවකි. අධ්‍යාපන දැනුමට අමතරව, වෘත්තීය අදාළ අත්දැකීම, සංස්කෘතික අවබෝධය සහ සමාජ ආර්ථික අත්දැකීම් ආදීන් මෙම කාර්යයන් පහසුවෙන් සහ නිසි ලෙස ඉටු කිරීමට සහය ලබා දෙයි. සමුද්‍රීය ආශ්‍රිතව ජීවත්වන සමාජය සාගර ආර්ථික මත පමණක් යැපෙන තත්ත්වයෙන්, බහු ආර්ථිකයක් පවත්වාගෙන යන සමාජයක් බවට පරිවර්තනය විය යුතුයි.